Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:5.

Vol. 71 பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; சங்.29:1 ஆகஸ்ட் 2025 No.8

கிறிஸ்துவுக்காகவும் அவரது மகிமைக்காகவும்

For Christ and His glory

'உன்னதத்திலிருந்து வரும் பெலன்'

அனைத்து தேவ பிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுவதில்லை. அது தேவ பிள்ளைகள் அனைவருக்கும் வாக்களிக்கப்பட்டிருந்தாலும் அடிக்கடி தடைகள் அந்த வரத்தைப் பெற்றுக் கொள்ளத் தடையாயிருக்கின்றன. சில வேளைகளில் தேவ பிள்ளைகள் அந்த நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள்.

இளைய குமாரன் வீட்டிற்குத் திரும்பிவந்த போது அவன் உடுத்தியிருந்த கந்தைகளோடு அவனை மேஜையில் உட்கார வைக்கவில்லை. அது சரியானதோ தகுதியானதோ அல்ல.

அன்பான தந்தை அவனது அழுக்கும் கந்தையுமான ஆடைகளோடு, அவனது கழுத்தைக் கட்டிப்பிடித்து, அணைத்துக் கொண்டான். பாவிகளுடைய நிலை இதுதான். ஆனாலும் மேஜையில் உட்கார இந்நிலை தகுதியற்றது.

இது போலவே தேவனோடுள்ள உறவையும் ஐக்கியத்தையும் அனுபவிக்க நீதியின் அங்கி தரிப்பிக்கப்பட வேண்டும். அது தந்தையால் கொடுக்கப்படும் அங்கி, அது மகனுடையதல்ல.

நமது பரிசுத்த வாழ்வுக்கான எல்லாவற்றையும் நமக்கு அருள் செய்பவர் தேவன். ஏன் ஆண்டவர் வல்லமையை வாக்குப் பண்ணியிருக்கிறார்? அந்த வல்லமையின் தாக்கம் என்ன? அந்த வல்லமை தூய ஆவியான வரிடமிருந்து நம்மைப் பிரிக்கக்கூடாது. நம்மில் ஊற்றப்படும் தூய ஆவியானவரின் வல்லமை அது. அந்த வல்லமை நமக்கு ஒப்புவிக்கப்படக்கூடியதல்ல. அது நம்மூலமாக கிரியை செய்யும்.

தூய ஆவியானவரின் மிகப் பெரிய பணி என்ன? அவரது ஒரே நோக்கம் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதாகும். ஆண்டவராகிய இயேசு, "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" யோவா.16:14 என்று கூறினார். தூய ஆவியானவரின் ஒவ்வொரு செயலும் ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்துகின்றன. எனது இருதயத்தில் தூய ஆவியானவர் முழுமையான நிறைவோடும் வல்லமையோடும் வருகிறதானால் அது இயேசு கிறிஸ்துவின் மகிமை ஒன்றிற்காகவே என்ற சத்தியத்தில் உறுதியாயிருப்போம்.

இது எனது ஒரே நோக்கமாயிருக்கிறதா? இதற்காக மட்டும் நான் பரத்தின் வல்லமையை நாடுகிறேனா? இல்லாவிட்டால் அதைத் தேடுவது வீண். இதில் மிகத் தெளிவாயிருப்போம். பரிசுத்த வாழ்வு இதன் முடிவல்ல, ஆனால் தூய்மையின் மூலமாக மட்டுமே அவரது மகிமைக்கு நாம் சாட்சியாயிருக்க முடியும். நாம் பாத்திரங்களாயல்ல வாய்க்கால்களாயிருக்க அழைக்கப்படுகிறோம். பாத்திரம் நிரம்பினால் நிரம்பி வீணாகும், ஆனால் வாய்க்கால் பிறருக்கு பயனளிக்கக் கூடியது.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" யோவா.7:38. "ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்" எபேசி.2:10. ஆவியின் நிறைவு நம்மை சந்தோஷப்படுத்தி, தூய்மையாக வாழ வைக்கிறது. ஆனால் நாம் மகிமைப்படவும், பிறர் நம்மைக் குறித்து பெருமையாய்ப் பேசுவதற்காக இது அளிக்கப்படவில்லை என்பதை மறக்க வேண்டாம்.

தூய்மையின் அழகு நம்மில் காணப்படும் போது, சாத்தான் தவறான நோக்கங்களைக் கொண்டுவரலாம். தங்கள் ஆசீர்வாதங்கள், சமாதானம், திருப்தி, சந்தோஷம் அல்லது பயன்பாடு ஆகியவற்றால் திருப்தியடைந்து விடுகிறவர்கள் இந்த ஆசீர்வாதத்தைப் பெற முடியாது. நான் வல்லமையுள்ள கிறிஸ்தவனானால் அவ்வல்லமை பிரதி பலிக்க வேண்டும். என் வாழ்வால் பிறரது வாழ்வு தாக்கமடைய வேண்டும். எனது வாழ்வால் பிறர் நன்மை பெற வேண்டும் என்ற எண்ணம் வேண்டும். சுயநலவாதிகளுக்கு தேவன் தமது ஆவியானவரை அளிப்பதில்லை.

நமது எஜமானுடைய வார்த்தைகளைக் கேளுங்கள். "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத் தானே பரிசுத்தமாக்குகிறேன்" யோவா.17:19. நாமும் மற்றவர்களை சுத்திகரிக்கும்படி சுத்தமாக்கப்பட வேண்டும்.

உன்னதத்தின் பெலன் சாட்சியாயிருப்பதோடு தொடர்புடையது. "எனக்குச் சாட்சியாயிருப்பீர்கள்" அப்.1:8. எந்த ஒரு வரமும் "பயன்படுத்து அல்லது இழந்து விடுவாய்" என்ற பழமொழி உண்டு. பரிசுத்தாவியின் வரமும் பயன்படுத்தப்படாவிட்டால் வீணாகிவிடும்.

நமது நோக்கத்தை மாற்ற வேண்டும்

நாம் நமது முழங்கால்களை தேவனுக்கு முன்பாக முடக்கி, தூய ஆவியானவர் நமது இருதயங்களை ஆராய்ந்து பார்த்து தேவனுடைய வல்லமையைத் தேடுவதற்கான நோக்கத்தைச் சரிப்படுத்த ஜெபிப்போம். நாம் பெரிய பரிசுத்தவான்களாக கருதப்பட வேண்டும் என்ற ஆசைகளையும், பெரிய ஆவிக்குரிய தலைவர்களாக இருக்க வேண்டும் என்ற லட்சியம், எல்லாவற்றையும் அவர் நம்மில் அழிக்கட்டும். தூய ஆவியானவரின் நோக்கங்களை தவிர நம் நோக்கங்கள் அனைத்தும் தள்ளி வைப்போம். அப்பொழுது அவர் நம் மூலமாக மகிமைப்படுவார். கிறிஸ்து நம் சாவுக்கேதுவான சரீரங்களில் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, ஒருமனதோடு, பெற்றுக் கொள்ளும் வாஞ்சையோடிருந்தால், ஆ! எவ்வளவு விரைவாக அக்கினி நம்மேல் விழும். அதுவும் அதுமட்டுமே! அது தான் பெந்தெகொஸ்தே நாளில் காணப்பட்ட பெரும் வாஞ்சையாயிருந்தது

சீமோன் பேதுரு தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டுப் பிரசங்கித்த போது ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவண்டை நடத்தப்பட்டதை பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது. ஒருவரும் பேதுருவையோ, அவனது பிரசங்கத்தையோ புகழவில்லை, மாறாக அந்த வல்லமையைக் குறித்து கேட்டப் போது 'இது தேவனால் பரத்திலிருந்து ஊற்றப்பட்டது, இது இயேசுகிறிஸ்துவினால் உண்டானது' என்று பேதுரு கூறினான் அப்.3:12-16 வாசிக்க .

ஸ்தேவான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவன், அவன் பிரசங்கிப்பதற்காக சபையால் தெரிந்து கொள்ளப்படவில்லை. பந்தி விசாரிப்புக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவன் அப்.6:4. அவன் அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்யும்போது பின்னணியில் உழைக்க தயாராக இருந்தான், தேவன் அவனை ஆவியினால் நிரப்பினார். அவனது சாட்சி தர்மசகாயத்தில் மட்டும் நின்றுவிடவில்லை. (ஒருவேளை நம்மில் சிலர் செய்வது போல) அவன் தூய ஆவியால் நிரம்பியவனாகவும், வல்லமை நிறைந்தவனாகவும் பிரசங்கித்தான். அதனால் யாரும் இரட்சிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும் சீமோன் பேதுருவின் பேச்சுக்கு அது இணையாயிருந்தது. ஏனெனில் அவன் பரிசுத்தாவியால் நிறைந்து பேசினான்.

(4 -ம் பக்கம் பார்க்க)

வருகை யின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955 - 1999)

Advisory Board : D. Stanly Jones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P. Mony

2025 எழுப்புதலுக்காக ஜெபிக்கும் ஆண்டு

உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6.

Wilt thou not revive us again; that thy people may rejoice in thee? Ps.85:6.

அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் யாத்திராகமம் 33:14

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற் பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2025 ஆகஸ்ட் *மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், 'வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்' துதிக்கிறேன்.*

ஜெபக்குறிப்பு 4. ***உபத்திரவப்படுகிறவர்களுக்காக***

நம்முடைய ஆண்டவராகிய இயேசு: **உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு,** *ஆனாலும் திடங் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் யோவான் 16:33. இந்த உபத்திரவம் நம்முடைய உறவுகளாலும், உலக நண்பர்களாலும் ஏற்படுவதல்ல; மாறாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக வாழுவதாலும், கிறிஸ்துவை பிறருக்கு இரட்சகராக அறிவித்து, இரட்சிப்பின் செய்தியை கூறுவதாலும்,* **சுவிசேஷ ஊழியம்** *செய்வதாலும் ஏற்படுவதாகும். ஆங்கிலத்தில் Persecution என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.*

ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்.

அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள் அப்.6:8; 7:58.

அவனைக் கொலை செய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று; அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள் அப்.8:1.

வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்;

கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள் எபி.11:36,37.

இந்தியாவுக்கு வந்த அப்போஸ்தலனாகிய தோமா எப்படி மரித்தார்? மணிப்பூர் மாநிலத்தில் கிறிஸ்தவர்களுக்கு நேரிடுவதை நாம் தொலைக்காட்சிகளில் காண்கிறோம் அல்லவா!

கிறிஸ்தவ ஆலயங்கள் இடிக்கப்படுகிறது. மிஷனெரிகள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். சில மிஷனெரிகள் எரிக்கப்படுகிறார்கள். இவர்களுக்காக கண்ணீரோடு ஜெபிப்பீர்களா?

வருகையின் தூதன்
ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

தாவீதின் பாவம்

மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கை போடவும் அனுப்பினான், தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான் *2 சாமுவேல் 11:1.*

1. பத்சேபாள்

ஒருநாள் சாயங்காலத்தில் தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்து, அரமனை உப்பரிக்கையின் மேல் உலாத்திக் கொண்டிருக்கும் போது, ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிக்கையின் மேலிருந்து கண்டான்; அந்த ஸ்திரீ வெகு சௌந்தரவதியாயிருந்தாள்.

அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்; அவள் எலியாமின் குமாரத்தியும் ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய ***பத்சேபாள்*** என்றார்கள்.

அப்பொழுது தாவீது ஆள் அனுப்பி அவளை அழைத்துவரச் சொன்னான்; அவள் அவனிடத்தில் வந்தபோது, அவளோடே சயனித்தான் *2 சாமு.11:2-4.*

2. ஏத்தியனாகிய உரியா

அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து, தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

அப்பொழுது தாவீது ஏத்தியனாகிய உரியாவை என்னிடத்தில் அனுப்பு என்று யோவாபினண்டைக்கு ஆள் அனுப்பினான்; அப்படியே யோவாப் உரியாவைத் தாவீதினிடத்திற்கு அனுப்பினான்.

(3-ம் பக்கம் பார்க்க)

ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை எங்கள் மேல் போடும். சபைகளின் நிர்பந்த நிலைமையைக் குறித்த தரிசனத்தை எங்களுக்குத் தாரும். ஜெபத்தில் எங்களுக்கு ஆத்திரத்தை அளியும். நித்திரையை எங்கள் கண்களுக்கு தூரமாக்கும். அசட்டையை எங்களை விட்டகற்றி கண்ணீரையும் பெருமூச்சையும் தாரும். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து வேண்டிக் கொண்டிருக்கிறவரே, ஜெபியாத பாவிகளாகிய எங்கள் மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் பொழிந்தருளும், ஆமென். ரோ. 8:26; எபி. 5:7; சகரியா 12:10.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப் பண்ணினான்; ஆனாலும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக் கொண்டான் 2 சாமு. 11:5,6,13.

3. உரியாவை கொன்ற தாவீது

காலமே தாவீது யோவாபுக்கு ஒரு நிருபத்தை எழுதி, உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினான்.

அந்த நிருபத்திலே மும்முரமாய் நடக்கிற போர் முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு, அவனை விட்டுப் பின் வாங்குங்கள் என்று எழுதியிருந்தான்.

அப்படியே யோவாப் அந்தப் பட்டணத்தைச் சூழக் காவல்போட்டிருக்கையில் பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள் என்று தான் அறிந்த இடத்தில் உரியாவை நிறுத்தினான்.

பட்டணத்து மனுஷர் புறப்பட்டு வந்து யோவாபோடே யுத்தம் பண்ணுகையில், தாவீதின் சேவகராகிய ஜனத்தில் சிலர் பட்டார்கள்; ஏத்தியனாகிய உரியாவும் செத்தான் 2 சாமு. 11:14-17.

4. நாத்தான் தீர்க்கதரிசி

கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்.

அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணி,

உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து, உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்.

கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய் 2 சாமு.12:1,7,8,9.

5. தேவனுடைய தண்டனை

இப்போதும் நீ என்னை அசட்டை பண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக் கொண்ட படியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும்.

கர்த்தர் சொல்லுகிறது என்ன வென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப் பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்த வனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான்.

நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்.

ஆனாலும் இந்தக்காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக்குப் போய் விட்டான் 2 சாமு.12:10-14.

6. தாவீதின் உபவாசம்

அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற ஆண் பிள்ளையை அடித்தார்; அது வியாதிப் பட்டுக் கேவலமாயிருந்தது.

அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி, உபவாசித்து, உள்ளே போய், இராமுழுவதும் தரையிலே கிடந்தான் 2 சாமு.12:15,16.

7. தாவீதின் பாவ அறிக்கை

பத்சேபாளிடத்தில் தாவீது பாவத்திற்குட்பட்ட பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தினபோது பாடி, இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

சங்கீதம் 51

1. தேவனே, உமது கிருபையின் படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

2. என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

3. என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

4. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர் பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

5. இதோ, நான் துர்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

6. இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

7. நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னை கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

8. நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

9. என் பாவங்களைப் பாராத படிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

10. தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

11. உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்.

12. உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

13. அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

14. தேவனே, என்னை இரட்சிக்குந் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.

15. ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

16. பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல.

17. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

18. சீயோனுக்கு உமது பிரியத்தின் படி நன்மை செய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

19. அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்; அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிற வர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்ததிகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் 1 யோவான் 1:8,9.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
அலுவலகம் : 95432 21008 வெஸ்லி தேவதாசன்
உதவி : 94897 40295 (WESLEY DEVADASON)

2026 தமிழ்நாடு தேர்தலுக்காக

ஜெபியுங்கள்

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ?

சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் லூக்கா 18:7,8.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனந்திரும்பியவர்களைக் குறித்து சந்தோஷப்படுமுன் அவன் கல்லெறிந்து கொல்லப்பட்டான். ஆண்டவராகிய இயேசு மகிமைப்பட்டார்.

என்ன? எப்படி? என்று ஆச்சரியமா? "இப்போது அறியமாட்டீர்கள் இனிமேல் அறிந்து கொள்ளுவீர்கள்". அப்போஸ்தலனாகிய பவுலின் மனந்திரும்புதலுக்கு ஒரு காரணம் ஸ்தேவான் என்று பலர் கூறுகின்றனர். ஸ்தேவானுடைய பிரசங்கம், மக்கள் கோபத்தால் பற்களைக் கடிக்கச் செய்தது. ஆனால் தேவனுடைய மகிமை, அவன் கிறிஸ்துவைப் போல எதிர்ப்பையும், பாடுகளையும், இரத்தசாட்சி மரணத்தையும் சகிக்க உதவியாயிருந்தது. அவனுடைய முகம் தேவ தூதனுடைய முகம் போல் பிரகாசிப்பதை மக்கள் கண்டனர்.

அன்பு சகோதரனே, நீ உண்மையாகவே பரத்திலிருந்து வரும் பெலனைத் தேடுகிறாயா? தேவனுக்கு ஸ்தோத்திரம். வல்லமையுள்ள கிறிஸ்தவனென்றால் பாடுகளும், புறக்கணிப்பும், கல்லெறிதலும், மரணமும் உண்டு. ஆனால் அதன் மூலம் தேவன் மகிமைப்படுவார் என அறிந்து ஆவலோடு அந்த வரத்தை நாடு. சுயமும், சுயதேடலும், சுயமதீப்பீடும், சுயமகிமையும் இதில் பிரவேசிக்காமல் ஜாக்கிரதையாயிருப்போம்.

கிறிஸ்துவை அறிவிப்பதால் சமுதாயத்திலிருந்து விலக்கப்படுதல் நிந்தனை ஆகியவற்றை சந்திக்கவும் சகிக்கவும் விரும்புகிறீர்களா? ஆசீர்வாதத்தால் நிரப்பப்பட உலக ஆசைகளையும் தீய நண்பர்களையும் விட்டுவிட ஆயத்தமா? ஆண்டவரைப் பார்த்து, "ஆண்டவரே, இன்னும் அதிகமாக இந்த வல்லமையைத் தாரும், நான் உம்மைப் பின் பற்றுகிறேன், நீர் எங்கு சென்றாலும், எங்கு நடத்தினாலும், எதைச் செய்யச் சொன்னாலும் அதன்படி செய்வேன், நீர் மாத்திரம் என் மூலம் மகிமைப்பட வேண்டும்" என்று சொல்லுவோம்.

தேவ சித்தம்

தேவ சித்ததிற்கு எதுவும் குறையாமல்,
தேவ சித்தம் தவிர வேறு எதுவும் இல்லை,
தேவ சித்ததிற்கு மேலாய் எதுவும் இல்லை.

இதன் தொகுப்பு

நான் தேவனால் பயன்படுத்தப்பட பலவீனனாயிருக்கிறேனா? கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்க பெயர் புகழற்றவனாயிருக்கிறேனா? தேவனை வெளிப்படுத்தும்படியாக இவ்வுலகில் வந்த ஆண்டவராகிய இயேசு தம்மை முற்றிலும் வெறுமையாக்கினாரே. நாங்களும் அப்படிச் செய்ய வேண்டுமே! ஆண்டவர் எங்கள் மூலமாக எதைச் செய்வார் என்ற எண்ணம் மேலோங்கி, எங்களை நாங்கள் முற்றிலும் உமக்கு அர்ப்பணிக்க உதவி செய்யும். ஆண்டவராகிய இயேசுவே, எங்கு எதற்கு எப்படி நீர் விரும்புகிறீரோ அப்படி நான் இருக்க விரும்புகிறேன் என்று அர்ப்பணிக்கும் ஒவ்வொருவரையும் அவர் வல்லமையாய் பயன் படுத்துவார்.

வல்லமையுள்ள **கிறிஸ்தவனென்றால்** பாடுகளும், புறக்கணிப்பும், கல்லெறிதலும், மரணமும் உண்டு. ஆனால் அதன் மூலம் தேவன் மகிமைப்படுவார் என அறிந்து ஆவலோடு அந்த வரத்தை நாடு.

எந்நிலையிலும் தேவனோடு மங்காத தொடர்பை வைத்துக் கொள்ளுங்கள்

Keep an unclouded relationship with God - At any cost

Harold Voelkel

1939 வேனிற்காலத்தில் **அலெட்டா N. ஜேக்கப்ஸ்** என்ற ஒரு பெண்ணும் **யூனிஸ் ஹராய்ஸ்** என்ற பெண்ணும் சீனாவிலிருந்து விடுமுறைக்காக கொரியா வந்தனர். இருவரும் திருமணமாகாதவர்கள். அங்கு அவர்கள் தங்கியிருந்த இடத்தில், ஆவிக்குரிய வாழ்வின் ஆழமான அனுபவத்திற்காக இல்லக் கூடுகைகள் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மிஷனெரிகள் முறைப்படி அதனை நடத்தி வந்தனர்.

ஜேக்கப்ஸ் இக்கூடுகையை நடத்திய போது, அவள் விசேஷித்த வரங்களை உடையவளென்றும் தேவனுடைய வல்லமையை அற்புதமான வகையில் அனுபவித்திருந்தாளென்றும் கூடியிருந்த வர்கள் அறியக் கூடியதாயிருந்தது.

எனவே ஒரு வாரம் இவ்வாறு ஜெபக்கூடுகைகள் நடத்த அவள் கேட்டுக் கொள்ளப்பட்டாள். அதன் மூலம் அனேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். அக்கூடுகைகளைக் குறித்து **Dr.L.T. நியூலாண்ட்** என்றக்வாங் ஜுவைச் சேர்ந்தவர் இப்படிக் குறிப்பிடுகிறார்:

"நான் கண்ட மனித சினேகிதர்களிலெல்லாம் இவளைப் போல கர்த்தரை உண்மையாகப் பெற்றுக் கொண்டவளும் கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்தவளும் ஒருவருமில்லை என்று கூறலாம். அனேக பரிசுத்தவான்களில் பரவசம் நிறைந்த அன்பு ஆண்டவரிடம் காணப்பட்டதைக் குறித்து வாசித்திருக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட ஒருவரை நேரில் பார்த்தது **ஜேக்கப்ஸ்** என்பவரில் தான்.

அவளுடைய வழிமுறைகள் எளிமையானவை. வேத புஸ்தகத்தை வாழ்வில் முக்கியப்படுத்துகிறாள். அவள் விவாதிப்பதோ கெஞ்சுவதோ இல்லை. ஆனால் தேவன் சொல்லுவதைக் கேட்பதில் உத்தமமாயிருக்க வேண்டும் என்று கூறுவாள். அபிஷேகிக்கப்பட்டவர்கள் என்றும் வேத போதனையில் பயிற்சி பெற்றவர்களென்றும் சொல்லப்பட்ட வர்களுக்கு மத்தியில் அவள் பணி செய்கிறாள். தேவனை அவரது வார்த்தையின் படி பற்றிக் கொள்ளுங்கள் பின்பு அவர் உங்கள் வாழ்வைக் குறித்துக் கூறும்படி அனுமதியுங்கள் என்று அவள் கூறுவாள்.

தேவன் நமது பரமபிதா. அவர் நமது மேற்படையான வாக்குகளை ஏற்றுக் கொள்வதில்லை. "நான் ஒரு பெரிய பாவி" என்று நீங்கள் சொன்னால் ஆராய்ந்து பார்த்து எந்தப் பாவங்கள் என்று பாருங்கள். நீங்கள் உட்கார்ந்து ஒரு கடுதாசியையும் ஒரு பென்சிலையும் தேவ வசனத்தையும் கையில் வைத்துக் கொண்டு தேவன் எவைகளைப் பாவமாகக் காண்பிக்கிறார் என்று பார்த்தால் நீங்கள் அதிகத் தெளிவடைந்து ஏசாயாவைப் போல, 'ஐயோ நான் அதமானேன்' ஏசா.6:5 என்றும் ஆயக்காரனைப் போல 'தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்' என்றும் கதருவீர்கள் லூக். 18:13.

"ஒருவர் தனது பாவங்களைக் கண்டு பிடிக்க ஒருவேளை முதல் தடவையாயிருக்கலாம், பரலோக பிதாவின் முன்னால் பாவ மன்னிப்புக்காகத் தன்னை நிறுத்த வேண்டும். அதன் பிறகுதான் சுத்திகரிப்பு ஆரம்பமாகிறது" 1 யோவ.1:9.

வெறும் அறிக்கையிடுதல் மட்டும் போதாது. இந்த அழகிய ஐக்கியம் நிறைந்த மிஷனெறி களத்தில் தவறான புரிந்து கொள்ளுதல்களும் பொறாமைகளும் முற்றிலும் அகற்றப்பட்டிருந்தன. இனி அறிக்கை பண்ணப்பட வேண்டிய வைகளும் சரிப்படுத்தப்பட வேண்டிய வைகளும் மற்றும் பற்பல விதங்களில் இழைத்த தவறுகளும் கண்டுபிடிக்கப்பட்டு எழுதப்பட வேண்டும்.

நாங்கள் கொரிய போதகர்களையும் பிற தலைவர்களையும் தெரிந்தெடுத்தோம். அவர்கள் வித்தியாசமான வர்களாயிருந்தனர். அவர்கள் அனலுள்ள வர்களும் ஆத்துமா எளிமையுள்ளதுமாயிருந்தது. எங்கள் வீடுகள் அதிக அழகுள்ளவைகளும், நிலையங்கள் சுத்தமாக்கப்பட்டன. நாங்கள் பத்துப் பேர் முழுவதும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு சந்தோஷமான தாழ்மையின் புதிய அனுபவத்தைப் பெற்றோம்.

பின்பு நாங்கள் ஆன்ட்லாங் என்னுமிடத்திலிருக்கும்போது க்வாங் ஜூ நிலையத்திலுள்ள ஒரு நபரின் அனுபவத்தை அவருடைய மனைவி மூலமாகக் கேட்டோம். ஜேக்கப்ஸ் இங்கு வந்த போது அவள் தனித்தனியாக நேர்முகத் தேர்வினை வேண்டியவர்களுக்கு அளித்தாள். ஒரு மருத்துவரின் மனைவி இவ்விதத் தேர்வில் அதிக பயனடைந்து தனது கணவருக்கும் இது தேவை என்று ஆலோசனை கூறினாள். ஆனால் அவரோ ஒரு பெண்ணிடம் என் பாவங்களைக் குறித்துப் பேச நான் விரும்பவில்லை. அவைகளைக் குறித்து நான் அறிவேன் என்று சொல்லிவிட்டார்.

இறுதியாக மனைவியின் அன்பான வற்புறுத்தலின் பேரில் அவர் ஒத்துக் கொண்டார். கலந்து கொண்ட அனேகர் கேள்விகள் கேட்ட போது தங்கள் இருதயம் எவ்வளவு சீர்கேடானது எனக் கண்டு கொண்டனர். உதாரணமாக இந்த டாக்டருடைய தேர்வினை மட்டும் குறிப்பிடுகிறேன். **கேள்வி:** 'முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்' மத்.6:33 என்ற வசனத்தைக் குறித்த கரிசனை உண்டா?

டாக்டர்: நான் அந்த வசனத்தை அறிவேன். கொரிய மக்களுக்கு அடிக்கடி இதன்மீது பிரசங்கித்துமிருக்கிறேன்.

கேள்வி: நீங்கள் நிச்சயமாக தேவனுடைய சித்தத்தை எல்லாவற்றிற்கும் மேலாக நாடு கிறீர்களா?

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர்: (சிறிது சிந்தித்துவிட்டு) எல்லா வற்றிலும் வாழ்வில் நான் முதலாவது தேட வில்லை என நினைக்கிறேன்.

கேள்வி : டாக்டர் நீங்கள் இந்த சத்தியத்தை அடிக்கடி கொரியர்களுக்குப் போதித்துள் ளீர்கள். ஆனால் உங்கள் வாழ்வில் நீங்கள் அதைக் கடைப்பிடிக்காவிட்டால் அப்படிப் பட்டவர்களைக் குறித்து நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

டாக்டர் : ஒரு மாய்மாலக்காரன்

கேள்வி: இதை தயவாக எழுதிக் கொடுப்பீர் களா?

'நான் ஒரு மாய்மாலக்காரன்' என்று அவர் எழுதினார். அந்த மாநாட்டின் முடிவில் அவர் எண்ணிப்பாராத எண்ணிறந்த பாவங்கள் வரிசைப்படுத்தப் பட்டன. இப்போது அவர் தன் பாவங் களுக்காக மனந்திரும்பி ஜெபித்த போது அற்புதமான பாவ மன்னிப்பையும் சமா தானத்தையும் பெற்றுக் கொண்டதை நினைவு கூருகிறார். அன்றிலிருந்து அனேகர் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள பரயாசப்பட்டு வருகிறார்.

தேவ வல்லமையும் அவரது பிரசன்னமும்

க்வாங் ஜு எழுப்புதல் கூடுகை சீயோலிலும் ட்டைக்குவிலும் மிஷனெறி களுக்காக நடத்தப்பட்ட பின்பு அதனால் பணியாளர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆன்ட்லாங்கை வந்து எட்டின. எனவே எங்களுக்குள்ளும் எழுப்புதல் வேண்டும் என விரும்பி ஜேக்கப்ஸை தொடர் கூடுகைகள் நடத்த அழைத்தோம்.

அவர்கள் அன்புடன் ஏற்றுக் கொண்டு தங்கள் நெருக்கடியான பணிகளின் மத்தியிலும் நவம்பர் 11-ம் நாள் ஒரு சனிக்கிழமை மராய்ஸ் -உடன் வந்து சேர்ந்தார்கள். இரவும் பகலும் ட்டைக்கு கூடுகையிலும் நேர்முக சந்திப்பிலும் செலவிட்டு சரீரத்தில் மிகவும் களைப்படைந்து ஞாயிறு இளைப்பாறினார். அப்போது க்வாங் ஜு மற்றும் ட்டைக்குவிலுள்ள அங்கத்த தினர் தங்கள் சாட்சிகளைக் கூறினர்.

முற்றிலும் கொள்கைவாதிகளான நாங்கள் இந்த சாட்சிகளை கவனித்தோம். குறிப்பாக நான் கூர்ந்து கவனித்தேன். இந்த சாட்சிகள் உபதேசத்தோடு பொருந்துமா என்பதான சிந்தனைக் காகவே அவ்வாறு கவனித்தேன்.

ஆனால் கூடுகையின் முடிவில் அவர்கள் வாழ்வில் உபதேசங்களும் தத்துவங்களுமல்ல, தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் வெளிப் பட்டதை உணர்ந்தேன். நான் முற்றிலும் திருப்தியடைந்தேன். ஆனால் ஊழி யர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை என்னால் விவரிக்க முடியவில்லை. ஏனெனில் பல வருடங்களாக நான் அவர் களை அறிந்திருந்தேன்.

பின்பு 5 தலைப்புகளின் கீழ் வேத பகுதிகளின் அட்டவணையின் சுருக்கம் எங்களுக்கு கொடுக் கப்பட்டது.

1. மனித இருதயத்தினைக் குறித்த தேவனுடைய படம்.
2. தேவனுடைய சில அந்தஸ்துகள்.
3. எனது பாவம் தேவனுக்கு என்ன செய்கிறது.
4. பாவத்திற்கான தூக்கம் மற்றும் தேவன் கல்வாரியில் வாக்குப் பண்ணியதும்
5. கொடுத்ததுமான ஜீவன்.

இந்த வேதபகுதிகளைக் கருத்தாக வாசித்து நமது வாழ்வோடு தொடர் புடைய பாவங்களிருந்தால் எழுத வேண்டும். நான் ஒரு முயற்சி செய்து சுயபரிசோதனை செய்து சிலவற்றை எழுதினேன்.

பாவத்திற்கான சவால்

ஜேக்கப்ஸ் திங்கள் மாலை ஆரம்பித்து ஐந்து நாட்கள் காலையிலும் மாலையிலும் கூடுகை நடத்தினார்கள். அப்போது வேதத்தைப் படிப்பதிலும், ஜெபிப்பதிலும் ஈடுபட்டோம். அவர் களில் காணப்பட்ட வல்லமை எங்க ளுக்கு சவாலாயிருந்தது.

சில நாட்களில் நாங்கள் எங்கள் பாவங்களால் உணர்வடைந்து கண்ணீர் வடித்தோம். நான் உணவு உண்ணும் ஆசையை இழந்தேன். கடந்த காலங் களில் உபவாசத்தைக் குறித்து அறிந்திருந் தாலும் இப்போது உணவை விரும்பாத படியால் உபவாசித்தேன். என் பாவத்தால் நான் வியாதிப்பட்டேன். மேலும் நான் தூங்க முடியவில்லை. ஒரு நாள் இரவில் வேதத்தைத் திறந்து வைத்துக் கொண்டு தேவனோடு தனித்திருந்து சமாதானத்திற் காகக் கெஞ்சி மன்றாடினேன். இரு பேட்டிகளில் எனது வாழ்வில் பாவத்தால் பயங்கரமான மாசு ஏற்பட்டிருப்பதைக் கண்டேன். தாங்க முடியாத ஆத்தும பாரம் ஏற்பட்டதால் என்னாலியன்ற மட்டும் உத்தமமாக ஜெபித்தேன். தேவன் எனது ஆத்துமாவைக் கழுகாவிட்டால், எனது உயிரையே எடுத்துக் கொள்ளும்படி ஜெபித்தேன். பல பக்கங்களில் எனது பாவங்களை எழுதியிருந்தேன். இதே நிலையில் தொடர்வதை விட சாவது மேல் என்று விரும்பினேன்.

"ஆண்டவரே, நானோ?" மத்.26:22

இப்பொழுது ரோமர் 1:21,32 ஆகிய வசனங்களுக்குத் திரும்பினேன். வாரந்தோறும் நடைபெறும் கொரிய வாலிபர்களுக்கான வேதபாட வகுப்பு களில் இந்தப் பகுதியை ஆவிக்குரிய ஓட்டத்தின் சரித்திரமாக சிறந்த விளக்க வுரைகளைக் கொண்டு போதித்திருக் கிறேன். ஆதியில் மனிதன் தேவனை அறிந்திருந்தும், பின்பு அவரை மகிமைப் படுத்தாமலும் நன்றிகெட்டுமிருந்தபடி யால் கிரமம் கிரமமாக விவரிக்க முடியாத பாவங்களுக்குள் சென்று வீழ்ச்சியடைந் ததாகக் கடைசி அதிகாரம் கூறுவதாகச் சுட்டிக் காண்பித்திருக்கிறேன்.

இப்போது பாரம் நிறைந்த இருதயத்தோடு இப்படியாக வாசித்தேன்: "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து தங்கள் சிந்த னைகளினாலே வீணரானார்கள், உணர் வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது"- எனது கண்களிலிருந்து செதில்கள் விழுந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. இது எனது சரித்திரம் என உணர்த்தப்பட்டேன்.

அந்த நிமிடத்திலிருந்து இது வரை வேத புத்தகம் எனது புத்தகமாகி விட்டது. அது என்னோடு தனிப்பட்ட முறையில் பேசுகிறது. அது வெளிப் படுத்தும் இரட்சகர் என்னுடையவர். இயேசு எனக்காகத் தமது இரத்தத்தை சிந்தினார்.

வேதபுத்தகத்தோடு நான் தனியாக உட்கார்ந்திருக்கும் போது ஜான் பன்யன் எழுதிய புத்தகத்திலுள்ள கிறிஸ்தி யானைப் போலிருந்தேன். என் ஆத்துமா விலிருந்து பாவம் நீக்கப்படுவதை உணர்ந்தேன். நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். என் மனைவியை அழைத்து நான் பெற்ற இந்த சத்தியத்தைப் பார்க்கச் சொன்னேன். என்ன சமாதானம்! என்ன சந்தோஷம்!. 'இந்த அனுபவம்தான் எல்லாரையும் நேசிக்கச் செய்கிறது' என்று தெளிவுபடக் கூறினேன்.

தேவனுக்கு ஸ்தோத்திரம். இதே அனுபவம் ஆன்ட்லாக் நிலையத்தி லுள்ள 10 அங்கத்தினரும் மனந்திரும்பி, பாவங்களை அறிக்கை செய்து இழந்த வாழ்வை மறுபடியும் பெற்றுக் கொண்டோம். ஒரு அங்கத்தினர் தந்தி மூலமாகப் பொருத்தமான ஒரு நல்ல செய்தியை அனுப்பினார் - "பத்துக் குஷ்டரோகிகள் சுத்தமடைந்தனர், பத்துப் பேரும் நன்றியுடையவர்கள்" என்பது அந்த செய்தி.

எழுப்புதலால் தொடர்ந்து இன்னும் இரு நிலையங்கள் சந்திக்கப் பட்டன. ஏறக்குறைய 100 மிஷனெறி களின் வாழ்க்கைகளில் தேவ கிருபை யால் மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே தேவன் நமக்குச் செய்ததும் செய்து கொண்டிருக்கிறதுமான காரியங்களை நியந்தனைக்குட்படுகிற அனைவருக் கும் செய்வார் என்று வாக்கு பண்ணி யிருப்பதை உங்களுக்கு நினைவு படுத்து கிறோம்.

இரட்டை உடுத்தி உபவாசம்

நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட போது கொரியர்களும் ஆசீர்வதிக்கப் பட்டனர். நாங்கள் கதறுவதையும் உணவுப் பொருட்கள் தொடப்படாம லிருப்பதையும், இரவு முழுவதும் விளக்குகள் அணைக்கப்படாமலிருப் பதையும் வேலையாட்கள் கண்டு என்ன நடைபெறுகிறது என ஆச்சரியமடைந் தனர். இந்தச் சிறிய பெண்மணி இந்த மிஷனெறிகளிடம் எதைக் கூறி அவர்கள் தூங்காமலும் சாப்பிடாமலும் அழுதுக் கொண்டிருக்கின்றனர் என கேள்வி எழுப்பினர்.

எங்களைப் போலவே அவர் களும் ஆசீர்வதிக்கப்படக்கூடும் என்று கூறிய போது அவர்களும் கண்ணீர்விட்டு மனந்திரும்பி வாழ்வினைப் பெற்றுக் கொண்டனர். எந்தப் பாவமும் சிறிய தல்ல என்று அவர்களும் கண்டு கொண்டனர். தேவ பார்வையில் எந்தப் பாவமும் தூய வாழ்வுக்குத் தடையே. வல்லமைக்கும் ஊழியத்திற்கும் கூட பெரிய பாவங்களைப் போலவே அவை தடை எனக் கண்டு கொண்டனர். சாக்குப்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்கு, நிர்விசாரம் போன்றவைகளும் பாவத்தின் இடத்தைப் பிடிக்கின்றன.

சிறிய பொறாமைகள் வெறுப்புக்குக் காரணமாயிருக்கின்றன. வெறுப்பு முறையே தேவ சமுகத்தில் கொலை பாதகமாயிருக்கிறது "தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனித கொலை பாதகனாயிருக்கிறான். மனுஷ கொலை பாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்" 1யோவ. 3:15.

மத்.5:28-ன்படி அசுத்தமான எண்ணங்கள் தேவனுக்கு முன்பாக அசுத்தத்திற்கு ஒப்பாகின்றன.

விசேஷித்த கூடுகைகள் ஸ்தல சபைகளில் நடத்தப்பட்டன. தூய ஆவியானவர் ஆழமான பாவ உணர்வை மக்களில் கொண்டு வந்தார்! அனேகருடைய வாழ்வில் தாழ்மை, மனந்திரும்புதல், பிரகாசமான வெற்றி போன்றவை கிடைத்தன.

மேற்கூறிய அனைத்து எழுப்புதல்களும் வேதவசனத்தைப் படிப்பதில் ஆரம்பித்தன. ஒவ்வொருவருக்கும் தன்னை மனதிலே வைத்தே அப்புத்தகம் எழுதப்பட்டதென்றும் ஒவ்வொருவருடைய தன்மையும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கண்டனர்.

ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வின் சவால்

எந்த கஷ்டத்திலும் ஆண்டவரோடு மங்காத ஒரு உறவை வைத்துக் கொள்ளுங்கள்.

அனுதினம் கிடைக்கும் ஆசீர்வாதங்களை அவர் வாய்ப்பு தரும் போது அதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆண்டவர் ஒரு மனிதனை ஆச்சரியமாக பயன்படுத்தக்கூடியவர். ஆனால் மனிதன் வேறு எவரையும் சார்ந்திருக்கக் கூடாது. அவர் நடத்தும் வழியிலெல்லாம் நாம் செல்லுவோமானால் அவர் நம்மை நடத்துவார். **ஜேக்கப்ஸ்** அம்மையாரின் குறிப்பேட்டில், 'கண்ணீரோடு இந்த பலவீனமான வாழ்வை நான் ஒப்படைத்தேன், மறுபடியும்...அவரிடம் நீர் எழுப்புதலை அனுப்ப எனது ஜீவனையும் இழுக்க தயார் என்று சொன்னேன்'.

இந்த செய்தி நன்மையற்றதும், கனியற்றதுமான ஒருவரது கையில் கிடைக்குமானால், அவரது வாழ்வு தோல்வி, சுயநலம் அல்லது பாவம் நிறைந்ததாயிருக்குமானால் மேற்கூறிய ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வின் சவாலை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா? அனேகரது வாழ்வினை ஆசீர்வதித்த வேதபகுதிகளை பயன்படுத்துங்கள். தனிப்பட்ட வாழ்வில் கவனமாகவும் ஜெபத்தோடும் பின்பற்றுங்கள்.

தேவ வசனம் வார்த்தை வார்த்தையாக உங்களை ஆராய்ந்து பார்க்கட்டும். உங்கள் பாவங்கள் அங்கு வெளிப்படுத்தப்படுவது போல உணரப்பட்டு, ஒத்துக் கொள்ளப்பட்டு எழுதப்படவும் வேண்டும். இது உங்களுக்கும் தேவனுக்குமிடையிலுள்ள ஈடு பாடு. நீங்கள் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி அவரிடத்தில் கொண்டு வாருங்கள். இது உங்களுக்கும் பிறருக்குமிடையிலுள்ள ஒரு நேர்மையான கொடுக்கல் வாங்கல். இது ஆவியால் நிரப்பப்பட்ட பாவ அறிக்கை. இதில் அவரது வசனம் பின்பற்றப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்ட வசனங்களை மறுபடியும் மறுபடியும் மெதுவாக நன்றாகப் படியுங்கள். தூய ஆவியானவர் தமது சோதனை விளக்கை உங்கள் கடந்த கால வாழ்விலும், நிகழ்கால வாழ்விலும் காண்பித்து தோல்விகளையும் அசுத்தங்களையும் வெளிப்படுத்தட்டும்.

I மானிட இதயத்தின் படமும் அதிலிருந்து வரும் பாவங்களின் பெயரும்:

கலா.5:19-21; 2தீமோ.3:2-5; எபே.5:3-7; கொலோ.3:5, 8-15; தீத்து1:16, 3:2-7, 2பேது.2:10-14,17-19; யூதா.15,16,20,21, 23-25; மாற்கு 7:20-23; யாத்.3:2-18; ரோமர் 1:21-32, 2:1-11, 2:21-24,29, 8:5-8; சங்.14:3, 66:18, 140:1-3; எரே.17:9; ஆதி.6:5-6; மத்.23:25-28; எசேக்.16:30,47,51-52, 20:42-44,36:21; நீதி.17:15; 2கொரி.7:1.

1. அவருடைய சில அந்தஸ்துகள்:

மத்.5:41-44, 7:1-5, 6:33, 12:46-50, லூக்.6:27-46; மல்.3:10, யாத்.20:8-9; கலா.5:22-23; தீத்து 3:12; பிலி. 2:5, 14:4-11; 1தெச.5:18; 1தீமோ.2:8-9; 1பேது.3:2-4.

2. பாவங்களை அட்டவணைப்படுத்துவதற்கான உதவிகள்:

★ தேவனுக்கு முதலிடம் கொடாமல் நேசித்தவைகளும் நாடியவைகளும் மத்.6:19-34,10:37, 19:16-26, 22:37; யோவா.5:44, மாற்கு 8:34-38; லூக்.12:13-34, 16:14-15 (எனது பணி, குடும்பம், இன்பங்கள், நான், எனது பணம், உடைமை, புகழ்)

★ தேவனுக்கெதிரான பாவங்கள். யோவா.5:30; 1கொரி.10:10-15; 1பேது.2:17-25, 5:5-6 (முறுமுறுத்தல், எதிர்த்து நிற்குதல், அவரது சித்தத்திற்கு அமைதியாக அர்ப்பணிக்க முடியாமை)

★ சுயம் வெளிப்படும் ரூபங்கள். 2தீமோ. 2:3 (சுயசித்தம், சுயபாதுகாப்பு, சுயபரிதாபம், சுய ஆறுதல், சுய சொகுசு போன்றவை)

★ உலக இன்பங்களிலிருந்து பிரிக்கப்படாத பகுதிகள், கேளிக்கைகள் போன்றவை. நல்லொழுக்கமில்லா தோற்றங்கள், உடைகள். சங்.14:2; கலா.6:14; யாக்.1:26-27,4:4; 1யோவா.2:15-16; மத்.6:24; 1கொரி.6:17-18; 1பேது.3:3-4; 1தீமோ. 2:9-10.

★ எனது அயலாருக்கு எதிரான எனது எல்லாப் பாவங்கள், தேவனுக்கு எதிராக அவருடைய பிரமாணங்களை மீறின சகல வழிகள் மாற்.12:28-31; மத்.5:38-48, 7:12,28:19-20; யாக்.2:8 (உதாரணமாக கோபம், விமர்சனம், பொறுமையின்மை, ஏமாற்றுதல், தவறான கருத்துக்கள், உக்கிரம், நம்பிக்கை துரோகம், மன்னியாமையின் ஆவி, நமக்கு எதிராகத் தவறு செய்தவர்களைத் திருத்துவதில் அன்பின்மை) நீதி.28:13; யாக்.5:16, மத்.5:23-24, 6:9-15, 18:15-35; லூக்.19:8; அப்.19:8; மாற்.11:22-26; லேவி.19:17-18.

★ இல்லத்தில் சரிபண்ணப்பட வேண்டியவைகள், வேலைக்காரருக்கு, சபை, நண்பர்கள், எதிரிகள் போன்றவர்களுக்கு எதிரான யாவும் தூய ஆவியானவரால் நினைவுபடுத்தப்பட்டு உடனடியாக சரிபண்ணப்பட வேண்டும்

★ அனைத்து மறைந்திருக்கும் தோல்விகள், வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படாதவைகளும் சரிசெய்யப்படாதவைகளும் 2கொரி.5:10; 1தீமோ.5:24

★ தனி ஆத்தும ஆதாயத்தில் தோல்விகள். எனது சேவையில் தேவனது ஆராய்ச்சி ஒளி விழவேண்டும்.

II மனந்திரும்புதலைப் பெறுவதற்காகக் கீழே குறிப்பிடப்படும் வேதபகுதிகளை ஆழமான சிந்தனையோடும், ஜெபத்தோடும், தூய ஆவியானவரின் வழி நடத்துதலோடும் படியுங்கள்.

இந்த வேதபகுதிகளை பாவத்தின் அந்தகாரம் உங்களில் ஒரு பயங்கர உணர்வைக் கொண்டுவருமட்டும் தியானியுங்கள். உங்கள் இருதயத்தைப் பாவத்தின் பயங்கரத்தை உணரும்படி திறந்து வையுங்கள். அதின் ஆழங்கள் கலக்கப்பட்டு, ஆழமான ஆத்தும துக்கம் உத்தம மனந்திரும்புதலுக்கு வழிநடத்தட்டும்.

(i) எனது பாவம் தேவனுக்கு ஏற்படும் விளைவுகளைக் காண்பிக்கும் பகுதிகள் மத்.26:37-39,42,67;27:26,28-31,34,44, 46; மாற்.14:33-36; லூக்.22:22-44, 63-64; யோவா.19:1-3,5,28,34,37; ஏசா.52:14; 53:2-3,5,12; சக.11:12-13.

(ii) பாவத்திற்கானதுக்கத்தையும், இருதய நொறுங்குதலையும் காண்பிப்பவை சங்.6:2,6-7;25:11;31:9,19;34:18; 38:1-10, 17-18; 40:12; 41:4;51:3-4; 55:4-5; 69:3-5; 102:2,4,9; யோபு 40:4; 42:5-6; லூக்.15:18-19; 18:13; ஏசா.6:5-8; எரே.29:13.

III தூய ஆவியானவரின் வழிகாட்டுதலின் கீழ் ஈடுசெய்யப்பட வேண்டியவைகளின் ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும்.

IV தேவன் ஒரு வெற்றியின் வாழ்வை உங்களுக்காக வைத்திருக்கிறார் என்ற உறுதியைப் பெற கீழே காணும் வேதபகுதிகளை கருத்தோடு படியுங்கள்.

தேவன் வாக்களிக்கும் மற்றும் கட்டளையிடும் வாழ்வைக் குறித்துக் கொள்ளுங்கள். தேவன் இத்தகைய ஒரு வாழ்வினை உங்களுக்குத் திட்டம் பண்ணியிருக்கிறார் என்பதைத் தெளிவாக ஆவியானவர் அறிவிக்கும்வரை இவற்றை ஜெபத்தோடு படியுங்கள்.

தேவன் வாக்களிக்கும் ஜீவன், கிறிஸ்து அதற்காகச் சிலுவையில் செலுத்திய கிரயம்: 1தெச.4:3 **(அவரது சித்தம்)** 4:7 **(அழைப்பு)** 5:23-24 **(அவரது பணி)** 1பேதுரு 15-16 **(அவரது கட்டளை)** சங்.51:10; கலா.2:20,5:22; ரோமர் 8:37; எபே.5:26-27; 2கொரி.2:14; 1யோ.1:7-9; யோவா.8:36; எசே.36:25-27.

V திட்டமாக பாவமன்னிப்பையும் இருதய சுத்திகரிப்பையும் பெறுங்கள்

எழுதப்பட்ட பாவங்களை அறிக்கையிடுவதன் மூலமாக. அதற்குரிய நிவாரணங்களை செய்யத் தீர்மானங்கள் மூலமாக. மேலும் தேவனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிப்பதின் மூலமாக.

உங்கள் முழுமையான அர்ப்பணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய அட்டவணை தயாரிப்பதற்கு உதவியாக:

★ நிபந்தனையற்ற அர்ப்பணத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்படும் எனக்குரியவை அனைத்தும் பிலிப்.3:7-8; ரோமர் 12:1-21.

★ எனது வாழ்விலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய அனைத்தும். எனக்குத் தகுதியாயிருப்பினும் நான் தேவனால் மிக அதிகமாக பயன்படுத்தப்பட மிக அவசியம் எனப்படாதவை. (எடுத்துக் காட்டாக சில வகையான சொகுசுகள், நம்மைப் பிரியப்படுத்தும் சில வகை பத்திரிகைகள், கேள்விக்குரிய நேரப் போக்குகள், நல்லவைகளாயிருந்தாலும் நமக்குத் தகுதியற்றவை)

★ அவருக்காகச் செய்யும்படி தேவன் கேட்கும் காரியங்கள் ஒருவேளை அவர் அவைகளைப் பிறரிடம் கேட்காமலிருக்கலாம். இப்படிப்பட்டவைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படியுங்கள் 1யோவா. 5:2-3; அப்.5:29.

பாவத்தில் கட்டப்பட்டவர்களுக்கு நான் செலுத்தித் தீர்க்க வேண்டிய கடன் ரோம.1:9-17.

VI பாவ மன்னிப்புக்காகவும் நிறைவுக்காகவும் விசுவாசத்தை உருவாக்கக் கருத்தோடு கீழ்க் காணப்படும் பகுதிகளைப் படிக்க

தேவன் அளிக்கும் விசுவாசத்தால் கொடுக்கப்பட்டுள்ள தேவவாக்குகளின் மீது நம்பிக்கையுடன் பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்குதலையும், ஆவியின் நிறைவையும் பெற்றுக்கொள்ளுங்கள் கலா.3:14; 1யோவா.3:16-24; எபே.2:8; அப்.5:32; லூக்.11:1-13. விசுவாசம் உங்களில் துளிர்காவிடில் இந்தப் பகுதிகளை மறுபடியும் மறுபடியும் படியுங்கள்.

விசுவாசம் உங்களில் ஏற்படாவிட்டால் வாழ்வில் ஏதோ தோல்வி ஏற்பட்டுள்ளது. சில நண்பர்களிடம் இரகசியமாகக் கூறிய பாவமாக ஒரு வேளை இருக்கலாம்.

பாவ மன்னிப்புக்கும் பாவ அறிக்கைக்குப் பின்பு கழுகப் படுவதற்கும் விசுவாசத்தைப் பெறுவதற்கு ஆதாரமான வேத பகுதிகள்:

ரோமர் 8:26-39; 8:1-4; யோ.1:9; எசேக்.36:25-27; 1தீமோ.4:5; யூதா 1; தீத்து 3:4-7;1கொரி.6:11,15:57;யோவா.8:11,36; 2தீமோ.2:21; 1தெச.5:23-24; எபி.9:13-14, 10:10-18.

VII வெற்றி வாழ்க்கையில் முன்னேற கீழ்க் கண்ட வேதபகுதிகளைக் கவனமாகப் படியுங்கள்

இவையெல்லாம் தேவனுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்து அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசமாயிருப்பது அவசியம். அவரில் நிலைத்திருங்கள்! அவர் ஒளியில் இருப்பது போல அவரது ஒளியில் நடவுங்கள். அப்போது ஆச்சரியமானதும் ஆசீர்வாதமானதுமான வாசல் திறக்கப்படும்.

பாவ மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் பெற்ற பின் உங்களை உற்சாகப்படுத்துவதற்கான வேத பகுதிகள்:

2நாளா.20:15;எரே.1:4-10;யோவா.2:5, 8:11,36, 9:31; எபி.6:11-12,10:38-39; கலா.5:1,2:20; ரோமர் 6:11; யோவா.1:7.

நாம் கிட்டிச் சேரும்படி கிறிஸ்து அழைக்கிறார்

Christ invites us to draw near

Rich Carmicheal

கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தால் வரும் ஆசீர்வாதங்கள்

நாம் அவரிலும், அவர் நம்மிலும் நிலைத்திருக்கும் போது நம்மிலும், நம்மூலமாகவும் நடைபெறும் காரியங்கள் நமது விழுந்து போன தன்மையால் அளவிட முடியாது. ஆனால் தேவனுடைய மகிமையான தன்மையாலும் அளவிலா ஆதாரத்தாலுமே இது கூடும். தேவனுடைய பரிபூரணம் வாசம் செய்யும் தேவ குமாரனைப் பற்றி நாம் பேசுகிறோம் கொலோ.1:19. அவர் சிருஷ்டித்து நிலை நிறுத்தும் வல்லமை நிறைந்தவர் கொலோ.1:16-17, எபி.1:3. அவர் ஜீவனும் ஒளியும் நிறைந்தவர் யோவா.1:4-5. கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவர் யோவா.1:14. அன்பும் உருக்கமும் நிறைந்தவர் எபே.3:19, மத்.9:36. அவரே "**வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்**" யோவா.14:6. அவர் "**அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமுமானவர்**" வெளி.22:13. அவர் நமது நல்ல மேய்ப்பன் யோவா.10:11. நமது இரட்சகர் 4:42. விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே எபி.12:2.

இந்த விளக்கங்கள் நமது ஆண்டவர் யார் என்பதையும் அவர் எதைச் செய்யக்கூடும் என்பதையும் அவரோடுள்ள தொடர்பு நமது வாழ்வில் எவைகளை நிறைவேற்றக்கூடும் என்பதையும் தெரிவிக்கின்றன.

உங்களுக்கு சந்தோஷம் வேண்டுமா? "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" யோ.15:11.

சமாதானம் வேண்டுமா? "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிற தில்லை, உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" யோவா.14:27. "... கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" பிலி.4:5-7. "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்" 1பேது.5:7.

பெலன் வேண்டுமா? "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு" பிலி.4:13.

விடுதலையும் ஆவிக்குரிய சுயாதீனமும் வேண்டுமா? "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார் தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும் ... என்னை அனுப்பினார்" லூக்.4:18-19.

சுகமாக வேண்டுமா? "அவரிடத்திலிந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகை தேடினார்கள்" லூக்.6:19. "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார்" மத்.8:17. "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" ஏசா.53:5.

தேவை சந்திக்கப்பட வேண்டுமா? "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" பிலி.4:19.

பரிபூரண வாழ்வு வேண்டுமா? "...நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்" யோவ.10:10.

சோதனையை மேற்கொள்ள உதவி வேண்டுமா? "ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" எபி.2:18.

ஆவிக்குரிய வெற்றி வேண்டுமா? "...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" யோ.16:33. "மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" வெளி.12:11.

கிருபையும் இரக்கமும் தேவையா? "நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" எபி.4:15-16.

உற்சாகமும் ஆறுதலும் தேவையா? "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக" 2தெச.2:16-17.

பாவம் மன்னிக்கப்பட வேண்டுமா? "நம்முடைய பாவங்களை நாமம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அறியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1யோவா.1:9.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியத்திற்கு தேவையான வல்லமை வேண்டுமா? "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்" *கொலோ.1:29.*

தேற்றுதல் தேவையா? "அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" *சங்.23:3.*

ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் வேண்டுமா? "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" *மத்.11:28-30.*

ஜீவ தண்ணீர் வேண்டுமா? "...ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" *யோவா.7:37,38.*

ஆவிக்குரிய வாழ்வு வேண்டுமா? "...ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" *யோவா.6:35.*

மன்றாட்டு தேவையா? "மேலும் தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" *எபி.7:25.* "...கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறார், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" *ரோமர் 8:34.*

வழிக்காட்டுதல் தேவையா? "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிக்கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் எனக்குப் பின் செல்கிறது" *யோவா.10:27.*

ஜெபத்தின் மூலம் நன்மை பெற வேண்டுமா? "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்" *யோவா.15:7.*

நீங்கள் உங்கள் எண்ணங்களையும் இருதயத்தையும் கிறிஸ்துவில் இணைத்து அவரண்டைக் கிட்டிச் சேர்ந்தால் அவரிடமிருந்து பெரிய ஆசீர்வாதங்களைப் பெறலாம். நீங்கள் ஆசீர்வதிக்கப்படும்போது பிறரும் அவரண்டை இழுக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் உங்களில் கிறிஸ்துவைக் காண்பார்கள். உங்கள் மூலம் தேவநாமம் மகிமைப்படட்டும்.

காத்திருப்பதும் பணி செய்வதும்

Waiting and Working

Andrew Murray

காத்திருப்பது பணி செய்யத் தேவையான பெலனைத் தருகிறது. எனவே சந்தோஷமாகவும், களைப்பின்றியும் பணி செய்யத் தகுதி பெறலாம் (ஏசா.40:31) படிக்க.

தேவனுக்காகப் பணி செய்கிற அனேகருக்கு அவருக்காகக் காத்திருப்பதின் விலை தெரிவதில்லை. இயற்கையான மார்க்க உணர்ச்சிகளின் தூண்டுதலால், ஒரு போதகர் அல்லது சங்கத்தின் கட்டளையால் இதனைச் செய்கிறார்கள். தேவனுக்காகப் பணி செய்வது எவ்வளவு தூய்மையானது என்ற உணர்வு இருப்பதில்லை. தேவ பணி தேவ பெலத்தால் மட்டுமே செய்யப்பட முடியும். அதற்கு அவர் நம்மில் கிரியை செய்ய வேண்டும். தேவ குமாரன் பிதாவினாலன்றி எதையும் செய்யவில்லை. பிதா அவரில் வாழ்ந்த படியால் அவரை சார்ந்து பணிகளை நிறைவேற்றினார். அதுபோலவே விசுவாசியும் தேவன் அவர்களில் கிரியை செய்யாவிடில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. நமது பெலவீனம் அதிகரிக்கும் போதுதான் அவரை அதிகமாக சார்ந்து கொள்வோம். அப்பொழுது அவரழ பெலனைப் பெறுவோம். அதே போல வெற்றிகரமான தேவ பணிக்கு தொடர்ந்து காத்திருப்பது மிக முக்கியமானது. ஆயினும் அதிகமாகப் பணி செய்யும் ஊழியர்கள் தேவசமுகத்தில் காத்திராத படியால் சபைகள் அதிக பாதிப்படைகின்றன.

பணி செய்யும்படியாக நமக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு எவ்வளவு புனிதமானது என்பதையும் அவசரமானது என்பதையும் தேவ பெலனின் மீது நமது சார்பு எவ்வளவு தேவை என்பதையும், அவருக்காகக் காத்திருப்பவர்கள் புது பெலனடைவார்கள் என்பதையும், தேவனுக்காகப் பணி செய்வது நம்மை விட்டுப் பிரிக்க முடியாதது என்பதையும் தூய ஆவியானவர் தாமே நமக்குக் காண்பிக்கும்படி ஜெபிப்போம்.

கொழுந்து விட்டு எரியும் இருதயங்கள்

Burning hearts

"...வழியிலே அவர் நம்முடனே பேசி: வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின பொழுது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா?" லூக்.24:32.

கிறிஸ்தவ சேவையில் கொழுந்து விட்டு இருதயம் எரிவது நமக்கு உயரிய வெற்றி. கொழுந்து விட்டு எரியும் இருதயங்கள் தங்களை பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்தக் கூடும். இந்த நாட்களுக்கு அத்தகைய இருதயங்கள் மிகத் தேவை. இந்த இருதயங்கள் அன்பினால் கொழுந்து விட்டு எரிந்து கிறிஸ்துவையும் ஆத்துமாக்களையும் நேசிக்க வேண்டும்.

ஏன் கிறிஸ்தவர்கள் வல்லமையற்றிருக்கிறார்கள்? பெந்தெகொஸ்தே நாளோடு தாரதம்யப்படுத்தும் போது இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாயிருக்கிறதே. பேர்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் இருதயங்கள் குளிர்ந்து கொண்டே போகிறதே. கிறிஸ்துவின் அன்பு இருதயங்களிலுள்ள கசடுகளை எரித்து, விசுவாசிகளின் நிர்விசாரம் என்ற மரித்த நிலையாவற்றையும் சுட்டெரிக்கிறது.

விசுவாசியின் வார்த்தைகள், செயல்கள், குரல், பார்வைகள் இவற்றின் மூலம் இந்த அன்பு வெளிப்படும். பரிசுத்தமாக்கப்பட்ட இருதயங்கள் வல்லமையான வாழ்வை ஏற்படுத்தும். அதுவே இன்றைய தேவை. கிறிஸ்துவுக்காக நாம் பணி செய்யும் போது நமக்கு கொழுந்து விட்டு எரியும் இருதயம் தேவை. அல்லாவிட்டால் நமது சேவை எந்திரமயமாகி விடும். எனவே கிறிஸ்துவின் அன்பாலும் வல்லமையாலும் கொழுந்து விட்டு எரிவோம்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு :

❖ இளைய குமாரன் வீட்டிற்குத் திரும்பிவந்த போது அவன் உடுத்தியிருந்த கந்தைகளோடு அவனை மேஜையில் உட்கார வைக்கவில்லை. அது சரியானதோ தகுதியானதோ அல்ல.

❖ அன்பான தந்தை அவனது அழுக்கும் கந்தையுமான ஆடைகளோடு, அவனது கழுத்தைக் கட்டிப்பிடித்து, அணைத்துக் கொண்டான். பாவிகளுடைய நிலை இதுதான். ஆனாலும் மேஜையில் உட்கார இந்நிலை தகுதியற்றது.

❖ நாம் பெரிய பரிசுத்தவான்களாக கருதப்பட வேண்டும் என்ற ஆசைகளையும், பெரிய ஆவிக்குரிய தலைவர்களாக இருக்க வேண்டும் என்ற லட்சியம், எல்லாவற்றையும் அவர் நம்மில் அழிக்கட்டும். தூய ஆவியானவரின் நோக்கங்களை தவிர நம் நோக்கங்கள் அனைத்தும் தள்ளி வைப்போம். அப்பொழுது அவர் நம் மூலமாக மகிமைப்படுவார்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason